# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,280 — 1937 ம் ஆண்டு பங்குனிமீ 24 ந் திகதி, புதன்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மவுன்ற் லவினியா றெயில்வே டேசனுக்குப்போகும் ரோட்டைத் திருத்துவதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இ, A 689. குறிச்சி—கல்கிசை.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 2 | 4 ம் உவாட்டில் இறைவரி இலக்கம் 301 கொண்ட ஆதனத்தின் பகுதி | தோட்டம், 4 வருஷஞ்சென்ற 1 அறளிமரமும், பூக்கன்றுகளும், பாம்கன்றுகளும் ஒரு மக்கி ரோட்டின் பகுதியும், 2 மரப்படலைத்தூணும் 1 மரப்படலையுமுள்ளது | எச். ரீ. அபெயவார்த்தன, மவுன்ற் அவெனியு, மவுன்ற் லவினியா | 0 0 1·80 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனாதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஆண்டு சித்திரை மாசம் 27 ந் தேதியிலன்று 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டு தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1937 ம் ஆண்டு பங்குனிமீ 22 ந் உ..

கார்ள். ஈ. ஆண்ற்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஒரு கிராமச் சங்க ரோட்டிற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

படத்து இல. 993 ம் இலக்கக் கிராமப்படத்து 1 ம், 2 ம் துண்டுகள். குறிச்சி—வடமேன் மாகாணத்தில் குருணாக்கல் டிஸ்திறிக்கில் கற்றுகம்பொல ஹற்பத்துவில் கற்றுகம்பொல கோறளை வடக்கில் உள்ள வீரம்புவ கிராமம்.

| துண்டு. | காணியினது பெயர். | | விபரம். | | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|---|---|
| 298 | தம்புகஹமுலவத்த | .. | 3 தென்னமரங்களுள்ள ரோட்டு | | (1) எம். ஆர். ஆர். எம். எஸ். பீ. ராமநாதன் செட்டியார், (2) எம். ஆர். ஆர். எம். எஸ். பீ. சுப்பிரமணியம் செட்டியார், இல. 221, பெரிய தெரு, நீர்கொழும்பு | 0 1 0·5 |
| 300 | டிை | .. | ரோட்டு | .. | டிை .. .. .. | 0 0 28·5 |
| 301 | டிை | .. | தென்னந்தோட்டம் | .. | டிை .. .. .. | 0 0 2·8 |
| 303 | டிை | .. | பாணிலம் | .. | டிை .. .. .. | 0 0 1·5 |
| 309 | டிை | .. | தென்னந்தோட்டம் | .. | டிை .. .. .. | 0 0 0·19 |

எடுத்துக்கொள்வதைற்கான எத்தனஞ்செய்யும்படி. 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வயைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்கணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படிவேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஆண்டு (ஏப்பிரல்) சித்திரை மாசம் 26 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு குளியாப்பிட்டி வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களுடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருணாக்கல் கச்சேரி,
1937 ம் ஆண்டு.(மார்ச்) பங்குனிமீ 19 ந் உ.

சீ. எச். ஹாா்ட்வெல்,
உதவி அரசாட்சி ஏசண்டு, குருணாக்கல் டிஸ்திறிக்.


99——J. N. 64522—146 (3/37)
T 1

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் டெமோதறையிலிருக்கும் சாதாரண ஜனங்களுக்கு கக்கூசு இயற்றல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 2, அட்டவணை இல. 9. குறிச்சி—கும்பல்வெல கோறளையிலிருக்கும் கொத்துவெல.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|---|
| 189 | அஸ்வெடும்வத்த .. | 3–4 வயதுள்ள 1 பாக்குமரமும், 2 கன்கூரியமரங் களும், 1 தோடம்மரமும் உள்ள தோட்டம் | கொத்துவெலையிலிருக்கும் கித்திகாமி யான்செலாகே அப்புகாமி | முடி | 0 0 4·77 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிசெக்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலவும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஞூ சித்திரை மாசம் 30 ந் தேதியிலன்று பகல் 10 மணிக்கு வதுளைக் கசேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மை யையும் அவ்வுடந்தைகள்க்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1937 ம் ஞூ பங்குனிமீ 18 ந் உ.

எஸ். சீ. பர்னந்து,
உதவி அரசாட்சி ஏசண்டு, ஊவா.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

களுத்துறை டிஸ்திறிக்கைச்சேர்ந்த றைகம் கோறளையில் லேனியாவில் வசிக்கும் விதானகே ஜயத்தேனிஸ் பெறேரு சோமவிதான ஆகிய நான் 1907 ம் ஆண்டு 1 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 1 B ம் செடியூலில் 2 ம் பிரமாணத்தின்படி இன்று தொடக்கம் 3 மாதம் சென்றபின் அனுராதபுற டிஸ்திறிக்கில் சிங்களத்தில் பிரசித்த நொத்தாரிஸ்ஸாக வேலை பார்ப்பதற்கு ரிஜிஸ்டார் ஜெனறல் அவர்களுக்கு மனுச் செய்வேனென்று இதனால் விளம்பரப்படுத்துகிறேன்.

ஜே. பீ. சோமவிதான.

மில்லெனிய, 1937 ம் ஞூ மாசிமீ 12 ந் உ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.